# செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு தமிழ்நாடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு.என்.வரதராஜன் அவர்கள் அனுப்பிய கடிதம் இன்று நாளேடுகளில் வெளிவந்துள்ளது. அதில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பொதுப்பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்த பள்ளிக்கூடம், பூங்கா, விளையாட்டு மைதானம் போன்ற இடங்களை ஜுலை முதல் வாரத்தில் டெண்டர் மற்றும் ஏல முறையில் விற்பனை செய்யப்போவதாக அறிவிக்கை வெளியாகி உள்ளது என்றும்; இது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதிக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களில் குடியிருப்பு மனைகள் போக, அந்தக் குடியிருப்புகளுக்குத் தேவையான வணிக மனைகள், பள்ளி மனைகள் மற்றும் பொது உபயோக மனைகள், அவற்றிற்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டு, மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மனைகள் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்தில் எந்த உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதோ அந்த உபயோகத்திற்கு மட்டுமே விளம்பரம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

பள்ளி மனைகளைப் பொறுத்தவரை தொடக்கப்பள்ளி, மழலையர் பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றை நடத்துவதற்காக மட்டுமே விளையாட்டு மைதானத்துடன் ஏலத்தின் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஏலமுறை கடந்த 20 ஆண்டு காலமாக வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது, சென்னை மற்றும் இதர இடங்களில் 1384 வணிக மனை, பள்ளி மனைகளில் ஓரிரு இடங்களில் விளையாட்டு மைதானத்துடன் இணைந்துள்ள மனைகளும் விற்பனைக்காக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. திரு.என்.வரதராஜன் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போல எந்த ஒரு பூங்காவிற்குரிய இடமும் விற்பனைக்கு விளம்பரம் செய்யப்படவில்லை; பள்ளி மனைகளைப் பொறுத்தவரை கடந்த 20 ஆண்டுகாலமாக நடைமுறையில் உள்ளவாறு பொது ஏலத்தின் மூலமாகவே விற்பனை செய்யப்படுகிறது.

---

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9